# வைணவக் கோவில்களில் திருவாய்மொழி

பேராசிரியர் Dr. K. V. ராமன்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரந்தாயத்தில் "திவ்யம்" என்ற சொல்லுக்கு தனிச் சிறப்பு உண்டு. ஆழ்வார்கள் திவ்யஸூரிகள் எனப் போற்றப்படுகின்றனர். அவர்கள் பாடிய பாசுரங்கள் திவ்யப்ரபந்தங்கள் என்றும் அப்பாசுரங்களில் பாடப் பெற்றுள்ள திருத்தலங்கள் திவ்யதேசங்கள் என்றும் வழங்கப் படுகின்றன. ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடைய இம்மூன்றுக்கும் அளிக்கப்பட்டுள்ள ஏற்றம் அளவிட முடியாத தாகும். ஆழ்வார்களின் பாசுரங்களை நாலாயிர திவ்ய ப்ரபந்தமாகத் தொகுத்தவர் நாதமுனிகள். அதை இசையில் அமைத்து கோயில்களில் பாடவும் ஏற்பாடு செய்தார். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட கோவில்கள் திவ்ய தேசங்களுக்கென தனி ஏற்றம் பெற்றன. அப்பாடல் களை கேட்டருள திருவுள்ளம் கொண்ட இறைவனின் முன் திவ்யப்ப்ரபந்தங்களை ஸேவிப்பது ஏற்றம் என்ற நிலை ஏற் பட்டது. இதற்காக வைணவர்கள் மூன்று முக்யமான காரியங்களைச் செய்தனர்: (1) திவ்யப்ரபந்தங்களை அருளிச் செய்த ஆழ்வார்களுக்கு விக்ரஹங்கள் ஏற்படுத்தி கோவில் களில் ப்ரதிஷ்டை செய்து உத்ஸவங்களும் வழிபாடுகளும் நடத்தினர். (2) அவர்கள் பாசுரங்களை அநுதினமும் கோவில் களிலும் உத்ஸவ காலங்களில் வீதிகளில் இயல் கோஷ்டி யாகவும் ஸேவிக்கும் வழிமுறையை ஏற்படுத்தினர். (3) அப் பாசுரங்களுக்கு பிள்ளான், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, மணவாள மாமுனிகள் போன்ற மஹாசாரியர்கள் பல விரிவுரைகள் எழுதினர். அவற்றை பகவத்விஷய காலக்ஷேப கிரந்தங்களாக மக்களிடையே பரவச் செய்தனர்.

ஆழ்வார்களில் பலர் தாழ்ந்த வகுப்பில் பிறந்தவர்களானலும் அவர்கள் பிறப்பைப் பார்க்காது, அவர்கள் பக்தியையே கருத்தில் கொண்டு இறைவனடியார்களாகவும் நித்யசூரிகளாகவும் வைத்துப் போற்றினர் உயர்குடியில் பிறந்தோரும். தமிழ்ச் சான்றேர்களான ஆழ்வார்களின் தலைமையில் உருவாகிய பக்தி வெள்ளம் தமிழ்நாடெங்கும் பரவி அர்ச்சாவதார வழிபாட்டிற்கும் கோவில்களின் வளர்ச்சிக்கும் வழிகோலின. இப்பக்தி இயக்கத்தை **தமிழ் வைணவ இயக்கம்** என்றே சொல்லலாம். பண்டிதரும் பாமரரும் வேற்றுமையில்லாமல் இவ்வியக்கத்தில் கலந்து கொண்டனர். பண்டிதர்கள் ஆழ்வார் பாசுரங்களை திராவிடவேதம் என்று உகந்து வேதத்திற்குச் சமமாக கொண்டனர். பாமரரும் எளிய தமிழிலுள்ள அழகான பாசுரங்களைப் புரிந்து கொள்ள முடிந்ததால் ஆழ்வார்களின் பக்தியை உணர்ந்து சுவைக்க முடிந்தது இவ்வாறு சமூகத்தினர் அனைவரும் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

ஆழ்வார்களுள் நம்மாழ்வார் நடுநாயகராகவும் தலைவராகவும் (ப்ரபந்ந ஜந கூடஸ்தர்) கருதப்பட்டார். அவரது திருவாய்மொழி திவ்யப்ரபந்தங்களுள் சிகரமாகக் (நாயகமாகக்) கருதப்பட்டது. இவற்றின் துணையில்லாமல் கோயில்களில் விழாக்களே நிறைவு பெருது என்ற நிலை ஏற்பட்டது. இதைத்தான் கம்பரும் "அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த அரும்பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும் தந்தம் விழாவு மழகும் என்னும்? தமிழார் கவியின் பந்தம் விழாவொழுகும் குருகூர் வந்த பண்ணவனே" என்கிருர் சடகோபரந்தாதியில்.

எனவே ஆழ்வார் பாசுரங்களைக் கோவில்களில் ஸேவிப்பதற்கு நிரந்தரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வியக்கம் நாதமுனிகள் காலத்திலேயே தொடங்கி, பிறகு ராமானுஜர் காலத்திலிருந்து எல்லா கோவில்களுக்கும் பரவி

நிலைத்து நின்றது என்பது கல்வெட்டுக்களால் ஐயமற விளங்கும். அதற்குப் பற்பல கோயில்களிலும் உள்ள பற்பல கல்வெட்டுக்களைச் சான்றாகக் காணலாம்.

வட ஆற்காடு ஜில்லாவில் எண்ணாயிரம் என்றொரு சிற்றூர் உள்ளது. இது ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்குள்ள ராஜராஜ விண்ணகரம் என்ற கோயிலில் கி. பி. 1023ம் வருடத்திய கல்வெட்டு (MER 1918) ஒன்று காணப்படுகிறது. அரசனின் வெற்றிக்காக அவ்வூர்ச் சபையானது; கோயிலுக்கு நன்கொடை அளித்ததாகவும் அதிலிருந்து ஒரு வேத பாடசாலையை நிறுவ வசதி செய்தது எனறும் தெரிகிறது. திருவாய்மொழி பாராயணமும் 'திருவாய்மொழி விண்ணப்பம் செய்யும்' 25 ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதனம் செய்ய வேண்டும் என்றும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது

இதே போல் உக்கல் என்றவிடத்திலும் உள்ள கல்வெட்டு ஒன்று "திருவாய்மொழித் தேவரை"ப் பற்றியும் அவ்வூர்க் கோயிலில் 'திருவாய்மொழித் திருப்பதிகம்" அநுசந்திப்பது பற்றியும் குறிப்பிடுகிறது (இவை முதலாம் ராஜராஜசோழன் காலத்திய கல்வெட்டுகள்).

தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள திரிபுவனையில் முதலாம் ராஜேந்திர சோழனுடைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டு (176 of 1919) (கி. பி. 1048ம் வருடத்தியது) வீரநாராயண விண்ணகரம் கோயிலில் எழுந்தருளியுள்ள வீரநாராயணப் பெருமாள், அழகியமணவாளர், நரசிம்மர் ஆகியோரின் மாசிப்புனர்வசு, ஸ்ரீ ஜயந்தி, சித்திரை ஐப்பசி மாதஉத்ஸவங்களில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்வோருக்குத் ததியா ராதனம் செய்வதற்காக 72 வேலிநிலம் மானியமாக வழங்கப் படுவதாகக் குறிப்பிடுகிறது.

செங்கல்பட்டு உத்தரமேரூரிலும் முதலாம் ராஜேந்திர சோழனின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று (*176* **and** *181* **of** *1923*) அநுதினமும் மூன்று ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவாய்மொழி அநுசந்திப்பதற்காக மானியங்கள் வழங்கப் பட்டதைக் குறிக்கிறது.

இவை அனைத்தும் ஸ்ரீராமாநுஜர் காலத்திற்கு முற்பட்டவை. அக்காலத்திலேயே திவ்யப்பிரபந்தங்கள் வேதங்களுக்குச் சமமாகப் போற்றப்பட்டு வந்ததை இவற்றிலிருந்து நன்கு அறியலாம்.

ஸ்ரீராமாநுஜர் காலத்தில் இவ்வியக்கம் மேலும் மேலும் வளர்ந்தது. திவ்யப்ரபந்தங்களின் கொள்கைகளையும் தத்துவங்களையும் ஸம்ஸ்க்ருத நூல்களின் மூலம் உலகெங்கும் பரப்பினார். அவற்றின் துணைக்கொண்டே பிரம்மசூத்திரங்களுக்கு உரை எழுதினார் என்று கருதப்படுகின்றது.

இனி ராமாநுஜர் காலத்தில் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சியையும், அதற்குச் சான்றாகச் சில கல்வெட்டுக்களையும் பார்ப்போம்.

**ஸ்ரீரங்கம் :** ஸ்ரீவைஷ்ணவ இயக்கத்திற்கு தலைமை ஸ்தானமாக கருதப்படும் இடம் இது. ஆழ்வார்களால் பாடப் பெற்றது. ராமாநுஜர் காலத்திலேயே இக் கோயிலில் எல்லா ஆழ்வார்களுக்கும் விக்ரஹங்கள் ஏற்பட்டிருந்தன. ராமாநுஜர் காலத்தவரான பட்டர் தம்முடைய ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் எல்லா ஆழ்வார்களும் ஸ்ரீரங்கம் கோயிலில் (விக்ரஹங்களாக) எழுந்தருளியிருப்பதைக் குறிக்கிறார். ஸ்ரீராமாநுஜரின் சமகாலத்தவரான அமுதனார் ராமாநுஜருக்குத் திருவாய்மொழியிலும் நம்மாழ்வார் பேரிலும் இருந்த ஈடுபாட்டைப் ராமாநுச நூற்றந்தாதியில் பல பாசுரங்களில் பாடுகிறார். நம்மாழ்வாருக்கும் திருவாய் மொழிக்கும் ஸ்ரீரங்கத்தில் அளிக்கப்பட்டிருந்த ஏற்றம் இதிலிருந்து தெளிவாகப் புலனாகும். **திருப்பள்ளி யெழுச்சியும் திருவாய் மொழியும் விண்ணப்பம் செய்ய** மானியங்கள் வழங்கப்பட்டிருந்ததாக கி. பி. 1085ம் வருஷத்திய கல்வெட்டு (*61* **of** *1892*) தெரிவிக்கிறது.

**காஞ்சீபுரம் :** ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முக்யமான திருத் தலங்களுள் மூன்ருவது இடத்தை வகிக்கும் இவ்வூர் வரத ராஜப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு (557 of 1919) ஒன்று இக்கோயிலில் சுமார் 58 ஸ்ரீவைஷ்ணவர்கள் அமர்ந்து திருவாய்மொழி விண்ணப்பம் செய்தார்கள் என்று தெரிவிக் கிறது. இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1242. மேலும் கி.பி. 1359 வருஷத்திய கல்வெட்டொன்று (572 and 585 of 1919) மூன்ரும் பல்லாளன் காஞ்சிக்கு விஜயம் செய்தபோது தனது பட்டமஹிஷிகளுடன் அபிஷேக மண்டபத்தில் வீற்றிருந்து கொண்டு திருவாய் மொழி அநுசந்தானத்தைக் கேட்டு அனுபவித்ததாகக் குறிப்பிடுகிறது.

**திருமலை – திருப்பதி :** ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இரண்டா வது முக்கியத் தலமான இங்கு நூற்றுக்கணக்கான கல்வெட் டுக்கள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுக்கள் திருவாய் மொழியும் மற்ற திவ்யப்பிரபந்தங்களும் சேவிப்போர்க்கு அரசர்களாலும், மிராசுதார் (பண்ணையார்) களாலும், பக்தர்களாலும் அளிக்கப்பட்ட மானியங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, மதுரகவிகள் நம்மாழ் வார் துதியாகப் பாடியுள்ள கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற பிரபந்தத்தை பெருமாள் முன்பு சேவிப்பது பற்றிக் கீழ்க்கண்ட கல்வெட்டு (200 T.T.) குறிக்கிறது.

> சித்திரையில் சித்திரை மதுரகவியின் கண்ணிநுண் சிறுத்தாம்பு ராமாநுஜ நந்தவனத்தில் திருப்பூ மண்ட பத்தில் ............ எம்பெருமானர் சன்னதியில் நம்மாழ் வார் ஆட்டைத் திருநக்ஷத்ரம் வைகாசி மாஸத்தில் திரு விசாகத்தில் திருவாய்மொழி கேட்டருளி............

மற்ருெரு கல்வெட்டு (146 G.T.) பெருமாள் முன்பு சேவிப்ப தைக் குறிப்பிடுகிறது. (கி. பி. 1543)

> அநந்தாம்பிள்ளை ஐயங்கார் பாரத்வாஜ கோத்திரம் —...திருப்பதி ஆசார்ய புருஷர் அத்யயனேத்ஸவத்தில்

கண்ணினுண் சிறுத்தாம்பு சிறப்பு கொண்டாடும் நாளுக்கு 500 நற்பணம். திருமாமணி மண்டபத்தில் மலை குனிய நின்ற பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளி சிறுத் தாம்பு கேட்டருளி அமுது செய்ய......

சிங்கர்பிள்ளை என்பவர் திருவாய்மொழி சிறப்பிற்காக நன்கொடை வழங்கியதாகவும் அதை தம்முடைய ஆசாரியரான அழகிய மணவாளஜீயர் பெயரால் செய்ததாகவும் திருமலையிலுள்ள 15ம் நூற்றுண்டைச் சேர்ந்த மற்றெரு கல் வெட்டு கூறுகிறது.

> "இந்தத் திருவாய் மொழி சிறப்பு தம்முடைய ஆசார்யர் அழகிய மணவாள சீயர்... .. கடவதாகவும்..."
> (494-T.T.)

திருமலை அடிவாரத்தில் தற்போது கபில தீர்த்தம் என்றழைக்கப்படும் ஆழ்வார் தீர்த்தம் உள்ளது. அங்கு வெகு அழகான நம்மாழ்வார் விக்ரஹம் ஒன்று உள்ளது. அங்குள்ள சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதில் நம்மாழ்வார் புகழாக ஸம்ஸ்க்ருதத்தில் - ஒரு ச்லோகம் பொறிக்கப்பட்டுள்ளது.

> "இங்கு எழுந்தருளியிருக்கும் மாமுனியானவர் திவ்யஜ்ஞானத்தை அடைந்து, தம்முடைய கருணையினுல் கலியினுல் பீடிக்கப்பட்டிருக்கும் மனிதர்களுக்கு துன்பத்தைப் போக்கு திவ்யஜ்ஞானத்தை அளிக்கிருர்" என்பது சுலோகத்தின் பொருளாகும்.

**ஹரி : ‖ திஷ்டத்யஸ்யாஸ்தட பரிஸ(ரே)...காபி தஸ்யா :**
**மூலே கச்சிந்நிவஸதி முனிம்மம...பதேஷ்டா |**
**காலத்ருஷ்ட்வா கலிகலுஷி (தம்)--(ச்யா) மபச்யத்**
**திவ்யஜ்ஞானஸ்ஸகலுதயயா......ப்ரஹ்மவித்யாம் ‖**

இவ்வாறு வைணவ அடியார்கள் எங்கெங்கெல்லாம் சென்றனரோ அங்கெல்லாம் ஆழ்வார்கள் பெருமையையும் திவ்யப்பிரபந்தங்களின் பெருமையையும் பரப்பினர். நாலாயிரத்தில் திருவாய் மொழியே உயர்ந்ததாகக் கருதப்பட்டதால் நம்மாழ்வார் ஆழ்வார்களுன் நாபகராகப் போற்றினர்.